ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 13.03.2019 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 திசெம்பர்

### முக்கிய பண்புகள்

- 2018 திசெம்பரில் இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையுடன் வர்த்தகப் பற்றாக்குறையும் (ஆண்டிற்கு ஆண்டு) குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. 2018 திசெம்பரில் ஏற்றுமதிகள் 1.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகள் 15.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.
- 2018ஆம் ஆண்டில் பொருட்களின் மொத்த ஏற்றுமதிகள் 4.7 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 11.9 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் 6.0 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 22.2 பில்லியன் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, 2018இல் வர்த்தகப் பற்றாக்குறை 2017இன் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 10.3 பில்லியனுக்கு மிதமாக விரிவடைந்தது.
- 2018 திசெம்பரில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 4.8 சதவீதம் (ஆண்டிற்கு ஆண்டு) கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியுடன் தொடர்ந்தும் விளங்கி 2018இல் ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் கொண்ட மொத்த வருமானத்தினைத் தோற்றுவித்தது. இது 2017இனை விட 11.6 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியாகும்.
- 2018 திசெம்பரில் காணப்பட்ட 13.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சி உட்பட, 2018இல் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனுக்கு 2.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.
- நிதியியல் கணக்கில், அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பன 2018 திசெம்பரில் வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.
- 2018 திசெம்பர் பிற்பகுதியில் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் குறைவடைந்து வர்த்தக நிலுவையில் காணப்பட்ட முன்னேற்றங்களை முக்கியமாகப் பிரதிபலித்தது.
- 2018 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனாக விளங்கின.

அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | திசெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - திசெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - திசெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,020 | 1,033 | 1.4 | 11,360 | 11,890 | 4.7 |
| இறக்குமதிகள் | 2,048 | 1,735 | -15.3 | 20,980 | 22,233 | 6.0 |
| வர்த்தக மீதி (தேறிய) | -1,029 | -701 | | -9,619 | -10,343 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் (ஆ) | 453 | 475 | 4.8 | 3,925 | 4,381 | 11.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 671 (இ) | 584 | -13.0 | 7,164 (இ) | 7,015 | -2.1 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | 11 | -26 | | 279 | -55 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 390 | 44 | | 5,710 | 5,535 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 124 | 8 | | 1,667 | 706 | |
| நீண்ட காலக் கடன்கள் | 267 | 36 | | 1,544 | 1,329 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 1,000 | 1,000 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | 251 | - | | 418 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 693 | 1,801 | |
| திரண்ட நிலுவை | | | | 2,068 | -1,103 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.

(இ) திருத்தப்பட்டது.

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.


(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியை ஊக்கமிழக்கச் செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2018 திசெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தது. எனினும், இறக்குமதி வளர்ச்சி ஏற்றுமதி வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டமையினால் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2018இல் வர்த்தகப் பற்றாக்குறை 2017 உடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தது.


- ஏற்றுமதி விலைகள் அதிகரித்து இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக 2018 திசெம்பரில் வர்த்தக மாற்று விகிதம் 5.5 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) 91.7 சுட்டெண் புள்ளிகளுக்கு மேம்பட்டது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தக மாற்று விகிதம் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் 105.5 சுட்டெண் புள்ளிகளில் பரந்தளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டமைக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விலைச்சுட்டெண்கள் இரண்டும் ஒரே வீதத்தில் அதிகரித்தமையே காரணமாகும்.

**வரைபடம் 1: மாதாந்த வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் - 2018**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் - 2018**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2018 திசெம்பரில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,033 மில்லியனுக்கு 1.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவால் அதிகரித்தது. இச்சிறிதளவு அதிகரிப்பிற்கு கடந்த ஆண்டு காலப்பகுதியில் 2017இன் இரண்டாவது மிக உயர்ந்த ஏற்றுமதிப் பெறுமதி பதிவுசெய்யப்பட்ட திசெம்பர் மாதத்தின் தளத் தாக்கமே முக்கிய காரணமாகும்.

- 2018 திசெம்பரில் ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சிக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாகப் பங்களித்த வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 திசெம்பரில் அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகளின் உயர்ந்த ஏற்றுமதிகளே முக்கிய காரணமாகும். ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஆடைகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வி இத்துணைத் துறையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உதவின. மேலும், இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தமைக்கு அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் தவிர்ந்த மற்றைய அனைத்து வகைகளினதும் மேம்பட்ட செயலாற்றமே காரணமாகும். உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அவற்றின் பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் உயர்வடைந்து 2018 திசெம்பரில் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், ஆண்டின் முதல் 11 மாத காலப்பகுதியில் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்த பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தமைக்கு இலகு எண்ணெய் ஏற்றுமதிகளின் குறைந்தளவே காரணமாகும். எனினும், நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்களின் ஏற்றுமதிகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. மேலும், 2018 திசெம்பரில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிப் பொருட்கள், பிளாத்திக்கு மற்றும் அது தொடர்பான பொருட்கள் மற்றும் அச்சிடல் தொழில்துறை உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

- 2018 திசெம்பரில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தெங்கு, கடலுணவு மற்றும் காய்கறிகள் தவிர்ந்த மற்றைய பல துணை வகைகளின் மோசமான செயலாற்றமே காரணமாகும். தேயிலையின் ஏற்றுமதி அளவு அதிகரித்த போதும் அதன் வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு சராசரி ஏற்றுமதி விலைகளில் பதிவுசெய்யப்பட்ட மிகப் பெரும்


வீழ்ச்சியே காரணமாகும். அதேவேளை, வாசனைத் திரவியங்கள், சிறு வேளாண்மை உற்பத்திகள், இறப்பர் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தன. எனினும், 2017 செத்தெம்பருக்குப் பின்னர் 2018 திசெம்பரில் முதற்றடவையாக தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளில் குறிப்பாக தேங்காய் துருவலிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். கடலுணவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 2018 திசெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான உயர்ந்த ஏற்றுமதிகளே காரணமாகும்.

- 2018 திசெம்பரில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 1.1 சதவீதத்தினால் அதிகரித்து 2017 திசெம்பர் அளவுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு அளவிலும் பார்க்க உயர்ந்த விலைகளினால் ஏற்றுமதி வளர்ச்சி தூண்டப்பட்டமையை காட்டுவதாக இருக்கிறது.

- ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஏற்றுமதி வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 11,360 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 11,890 மில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகள் தூண்டுதலாக அமைந்த வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. புடவைகள் மற்றும் ஆடைகள், பெற்றோலிய உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் உயர்ந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்து கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தன. வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இல் வீழ்ச்சியடைந்தமைக்கு கடலுணவு ஏற்றுமதிகள் நீங்கலாக பெரும்பாலும் மற்றைய அனைத்து துணை வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாக அமைந்தது.


- ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2018இல் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 0.5 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 4.1 சதவீதத்தினால் அதிகரித்து ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி 2017 உடன் ஒப்பிடுகையில் அளவிலும் பார்க்க ஏற்றுமதி விலைகளினால் முக்கியமாகத் தூண்டப்பட்டமையைச் சுட்டுவதாக இருக்கிறது.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | திசெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - திசெ 2017 ஐ.அ.டொ. மில் | சன – திசெ 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **796.3** | **813.2** | **2.1** | **8,541.9** | **9,258.2** | **8.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 32.8 | 38.5 | 17.4 | 392.7 | 462.3 | 17.7 |
| விலங்குத்தீன் | 9.9 | 8.2 | (17.7) | 80.2 | 107.8 | 34.5 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 470.0 | 493.4 | 5.0 | 5,031.9 | 5,317.7 | 5.7 |
| இதில் ஆடைகள் | 445.1 | 459.6 | 3.2 | 4,739.3 | 4,960.8 | 4.7 |
| புடவைகள் | 17.4 | 24.2 | 39.2 | 205.4 | 260.1 | 26.6 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.5 | 9.6 | 28.8 | 87.3 | 96.8 | 10.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 74.6 | 76.4 | 2.4 | 835.4 | 875.3 | 4.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.7 | 18.9 | (9.1) | 257.5 | 278.0 | 8.0 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 30.0 | 33.1 | 10.6 | 370.8 | 434.8 | 17.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 4.6 | 8.4 | 80.6 | 162.3 | 120.3 | (25.9) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 62.4 | 52.9 | (15.2) | 434.3 | 622.1 | 43.2 |
| இரசாயன உற்பத்திகள் | 12.4 | 13.2 | 6.2 | 146.4 | 166.8 | 13.9 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.7 | 11.7 | (7.8) | 138.8 | 140.5 | 1.2 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 4.3 | 2.4 | (44.5) | 48.8 | 31.7 | (35.2) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 14.1 | 8.7 | (38.5) | 158.4 | 147.7 | (6.8) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 8.1 | 7.4 | (9.3) | 74.6 | 77.6 | 4.1 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 10.2 | 12.4 | 21.5 | 115.9 | 165.4 | 42.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.9 | 2.0 | (32.3) | 33.7 | 31.3 | (7.3) |
| ஏனையவை | 26.4 | 25.7 | (2.7) | 260.2 | 279.0 | 7.2 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **219.7** | **216.6** | **(1.4)** | **2,767.2** | **2,579.3** | **(6.8)** |
| தேயிலை | 126.9 | 117.1 | (7.8) | 1,529.8 | 1,428.5 | (6.6) |
| இறப்பர் | 3.3 | 1.9 | (41.9) | 38.9 | 31.6 | (18.8) |
| தேங்காய் | 18.9 | 23.9 | 26.3 | 347.9 | 311.0 | (10.6) |
| வாசனைத்திரவியங்கள் | 32.6 | 30.0 | (8.2) | 406.2 | 360.2 | (11.3) |
| மரக்கறிகள் | 2.0 | 2.2 | 6.5 | 28.5 | 28.2 | (0.8) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.9 | 4.1 | (17.8) | 36.5 | 35.6 | (2.5) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.4 | 8.3 | (11.9) | 138.7 | 118.4 | (14.7) |
| கடலுணவு | 21.5 | 29.2 | 35.7 | 240.6 | 265.8 | 10.5 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.3** | **2.0** | **(15.2)** | **34.5** | **34.4** | **(0.4)** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.2** | **1.6** | **35.8** | **16.9** | **17.8** | **5.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,019.5** | **1,033.4** | **1.4** | **11,360.4** | **11,889.6** | **4.7** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- மத்திய வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வணிகப்பொருள் இறக்குமதி மீதான செலவினம் 2018 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,735 மில்லியனுக்கு 15.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தது. இடைநிலைப்பொருட்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப்பொருட்களின் அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்துள்ளன.

- 2018 திசெம்பரில் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருள், தங்கம் மற்றும் அடிப்படை உலோகங்கள் மீது ஏற்பட்ட குறைந்த செலவினமே முக்கிய காரணமாகும். மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் குறைந்த விலைகள் அதேபோன்று சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரியின் குறைந்த இறக்குமதி அளவுகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த நன்மைகள் காரணமாக எரிபொருள் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. தங்கத்தின் மீது சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டமையின் சாதகமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 திசெம்பரில் மிகச் சிறியதொரு மட்டத்திற்குத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, அடிப்படை உலோக இறக்குமதிகள் மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கின் குறைந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். எனினும், புடவை மற்றும் புடவைப்பொருட்கள், கோதுமை மற்றும் சோளம் மற்றும் வளமாக்கி என்பன மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தது.

- 2018 திசெம்பரில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி, காய்கறிகள், தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் என்பன மீதான குறைந்த இறக்குமதிச் செலவினமே முக்கிய காரணமாகும். அரிசி இறக்குமதி மீதான செலவினம் இம்மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டுச் சந்தையின் உயர்ந்த நிரம்பல் காரணமாக அரிசியின் இறக்குமதி அளவு குறைவாகக் காணப்பட்டமையே காரணமாகும். ஊர்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கை வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 திசெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையைக் காட்டியது. தொலைத்தொடர்பூட்டல் கருவிகள், இறப்பர் உற்பத்திகள், வீட்டு உபயோகச் சாதனங்கள், வாசனைப்பொருட்கள் மற்றும் குளியலறைப்பொருட்கள் போன்ற உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் 2018 திசெம்பரில் வீழ்ச்சியடைந்தமைக்கு அத்தியாவசியமல்லாத குறிப்பிட்ட வகை நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளே காரணமாகும். எனினும், பண்ணை உற்பத்திகள், சீனி மற்றும் ஆடை மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தது.

- 2018 திசெம்பரில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகள், போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் கட்டடப்பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்தன.


- 2018 திசெம்பரில் இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் ஆகிய இரண்டும் முறையே 11.6 சதவீதத்தினாலும் 4.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2017ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் குறைந்த அளவும் விலைகளும் தூண்டுதலாக அமைந்தமையை எடுத்துக்காட்டின.

- ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 22,233 மில்லியனுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு

எரிபொருள், தனியாள் உந்து ஊர்திகள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மற்றும் வளமாக்கி இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய தூண்டுதலாக விளங்கியது.


- 2018 காலப்பகுதியில், சென்மதி நிலுவையின் மீதான அழுத்தத்தினைக் தணிக்கும் நோக்கத்துடன் சென்மதி நிலுவையின் மீதான இறக்குமதிச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக தங்கம், தனியாள் உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீது பல கொள்கை வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் அறிமுகப்படுத்தின. இதன் விளைவாக இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டின் பிற்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.
- ஒன்றுசேர்ந்த அடிப்படையில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 2018இல் முறையே 1.8 சதவீதத்தினாலும் 4.1 சதவீதத்தினாலும் அதிகரித்து இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு 2017 உடன் ஒப்பிடுகையில் அளவுகளின் தாக்கத்திலும் பார்க்க விலையின் தாக்கம் தூண்டுதலாக அமைந்தமையினை முக்கியமாக எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**





மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6:இறக்குமதி அளவுச் சுட்டெண்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: தனியாள் உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் - 2018**




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | திசெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - திசெ 2017 ஐ.அ.டொ. மில் | சன - திசெ 2018 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| 1. நுகர்வுப் பொருட்கள் | **433.6** | **357.0** | **(17.7)** | **4,502.5** | **4,979.7** | **10.6** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 181.5 | 134.6 | (25.8) | 1,841.1 | 1,606.1 | (12.8) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 42.4 | 4.9 | (88.3) | 314.5 | 126.2 | (59.9) |
| இதில் அரிசி | 40.8 | 2.9 | (93.0) | 300.9 | 106.8 | (64.5) |
| பால் உற்பத்திகள் | 24.8 | 33.2 | 33.9 | 315.8 | 332.3 | 5.2 |
| மரக்கறிகள் | 40.6 | 26.1 | (35.8) | 368.0 | 304.0 | (17.4) |
| கடலுணவு | 18.3 | 14.8 | (19.2) | 217.5 | 197.2 | (9.3) |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 24.3 | 26.3 | 8.3 | 258.0 | 249.7 | (3.2) |
| வாசனைத் திரவியங்கள் | 8.3 | 9.8 | 18.0 | 92.8 | 114.0 | 22.9 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.7 | 19.4 | (14.6) | 274.4 | 282.7 | 3.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 252.1 | 222.4 | (11.8) | 2,661.5 | 3,373.6 | 26.8 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 95.3 | 77.3 | (18.9) | 772.7 | 1,573.5 | 103.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 45.5 | 43.4 | (4.8) | 520.0 | 532.0 | 2.3 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 18.6 | 16.2 | (13.0) | 258.2 | 232.2 | (10.1) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 24.2 | 26.9 | 11.4 | 369.0 | 310.3 | (15.9) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 27.1 | 21.5 | (20.7) | 281.2 | 272.4 | (3.1) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாட வகைகள் | 16.6 | 13.0 | (22.0) | 186.2 | 169.4 | (9.0) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 24.6 | 24.1 | (2.0) | 274.3 | 283.8 | 3.5 |
| 2. **இடைநிலைப் பொருட்கள்** | **1,193.8** | **983.1** | **(17.6)** | **11,435.8** | **12,488.0** | **9.2** |
| எரிபொருள் | 433.3 | 317.3 | (26.8) | 3,427.9 | 4,151.9 | 21.1 |
| இதில் மசகெண்ணெய் | 95.7 | 91.4 | (4.5) | 704.0 | 978.1 | 38.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 295.1 | 187.0 | (36.6) | 2,462.5 | 2,937.2 | 19.3 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 95.4 | 20.0 | (79.0) | 772.4 | 572.7 | (25.9) |
| இதில் தங்கம் | 79.1 | 0.0 | (100.0) | 649.8 | 438.7 | (32.5) |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 232.5 | 241.5 | 3.9 | 2,724.2 | 2,858.5 | 4.9 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 40.1 | 42.7 | 6.5 | 484.6 | 529.4 | 9.3 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 24.0 | 17.9 | (25.5) | 204.3 | 207.6 | 1.6 |
| கோதுமை மற்றும் சோளம் | 2.7 | 24.9 | 808.1 | 356.6 | 373.5 | 4.7 |
| அடிப்படை உலோகங்கள் | 125.1 | 86.1 | (31.2) | 628.7 | 682.8 | 8.6 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 55.6 | 51.5 | (7.4) | 632.6 | 697.4 | 10.2 |
| இரசாயன உற்பத்திகள் | 72.4 | 69.9 | (3.4) | 834.5 | 904.2 | 8.4 |
| வளமாக்கி | 16.2 | 26.0 | 60.9 | 102.8 | 261.6 | 154.4 |
| இறப்பர் மற்றும் அவற்றின் பொருட்கள் | 23.7 | 19.9 | (16.1) | 287.8 | 268.9 | (6.6) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 72.8 | 65.5 | (10.0) | 979.3 | 979.5 | 0.0 |
| 3. **முதலீட்டுப் பொருட்கள்** | **418.8** | **394.0** | **(5.9)** | **4,894.7** | **4,690.4** | **(4.2)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொறி மற்றும் கருவிகள் | 229.6 | 200.0 | (12.9) | 2,620.6 | 2,491.6 | (4.9) |
| கட்டடப் பொருட்கள் | 130.9 | 141.3 | 8.0 | 1,591.4 | 1,524.5 | (4.2) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 57.9 | 52.2 | (9.8) | 674.9 | 668.1 | (1.0) |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.4 | 0.4 | (0.7) | 7.8 | 6.1 | (22.4) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.4** | **0.4** | **(81.1)** | **146.8** | **74.6** | **(49.1)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **2,048.5** | **1,734.6** | **(15.3)** | **20,979.8** | **22,232.7** | **6.0** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்


- 2018 திசெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து 2017இன் 2.1 மில்லியன் கொண்ட வருகைகளுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 2.3 மில்லியன் கொண்ட மொத்த வருகைகளைத் தோற்றுவித்தன. கிழக்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு தவிர்ந்த அனைத்து முக்கிய பிராந்தியங்களிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2018இல் அதிகரித்தன.

- 2018இல் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான முன்னணி மூல நாடாக இந்தியா தொடர்ந்தும் விளங்கிய வேளையில் சிறிதளவு வீழ்ச்சிக்கிடையிலும் சீனா இரண்டாவது பெரிய மூல நாடாக விளங்கியதுடன் இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலியா என்பன காணப்பட்டன.

- சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் சுற்றுலாப் பயணிகளின் செலவினத்தின் மதிப்பிடப்பட்ட சராசரியில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 11.6 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக சுற்றுலா வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 3,925 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 4,381 மில்லியனுக்கு உயர்வடைந்தன.


- 2018 திசெம்பரில் தொழிலாளர் பணவனுப்பல்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 584 மில்லியனுக்கு 13.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் ஐ.அ.டொலர் 7,164 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 7,015 மில்லியனுக்கு 2.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 8: திசெம்பரில் சுற்றுலாப் பயணிகள் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2018 திசெம்பரில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆகிய இரண்டும் வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களைக் காட்டின. அரச பிணையங்கள் சந்தை இம்மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 188 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்து 2018ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 990 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைத் தோற்றுவித்தது.
- 2018 திசெம்பரில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் இரண்டையும் உள்ளடக்கி ஐ.அ.டொலர் 26 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 55 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. இது இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 133 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 77 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலொன்றையும் உள்ளடக்கியிருந்தது.
- அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2018 திசெம்பர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 192 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2018இல் ஐ.அ.டொலர் 558 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2018 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனில் மதிப்பிடப்பட்டன. இது 3.7 மாத இறக்குமதிகளுக்குச் சமனானது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனாக விளங்கின. இது 5.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும்.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2018 ஆண்டுப்பகுதியில், இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக 16.4 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் ஏனைய முக்கிய நாணயங்களுக்கு எதிராகவும் தேய்வடைந்தது.
- எனினும், 2019 மாச்சு 13 நாள் வரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 2.2 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மேலும் குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ரூபாவும் இக்காலப்பகுதியில் ஸ்டேர்லிங் பவுண் நீங்கலாக ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது. செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் தற்பொழுது குறைவடைந்துள்ளமையினால் மத்திய வங்கி ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான அளவுத் தேவைப்பாட்டை 2019 மாச்சு 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அகற்றியது.

**வரைபடம் 11: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 மாச்சு 13 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +2.2% |
| யூரோ | -12.7% | +3.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -0.9% |
| யப்பானிய யென் | -18.1% | +2.9% |
| கனேடியன் டொலர் | -9.3% | +0.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +2.2% |
| இந்தியன் ரூபா | -8.7% | +1.7% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி